**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

## MCOP. No.26/2022

29.11.2024

## P.W.1- தங்கராஜ்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து மாதம் ரூ.10,000 சம்பாதித்து வருவபதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்தவுடன் நான் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறவில்லை என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் உரிமம், பதிவு சான்றிதழ், காப்பீடு சான்றிதழ் ஆகியவைகளை எனது தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் உரிமம், பதிவு சான்றிதழ், காப்பீடு சான்றிதழ் ஆகியவைகளை எனது தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு செலவழித்த பணத்தை விட அதிகமான பணத்தை போட்டு பில் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1வது எதிர்மனுதாரர் வருவதை கவனிக்காமல் நான் தான் வாகனத்தை அதிவேகமாக ஓட்டியதால் இந்த விபத்து நடந்தது என்றால் சரியல்ல. 1வது எதிர்மனுதாரர் விபத்து காலத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் இருந்ததாலும், நான் கவனக்குறைவாக சென்றதாலும், 2வது எதிர்மனுதாரர் தரப்பில் இழப்பீடு தொகை செலுத்த கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2024.11.29 16:30:24 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.